முருகப்பெருமான் துணை

**மகான் வரதரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.11.2021, வியாழக்கிழமை

1. ஞான ஒளி கொண்ட அரங்கா
ஞானயுகம் படைக்க வேண்டி
ஞானபண்டிதன் வழிபாடாக
நம்பிக்கை தரும் சரவண சோதி ஏற்றி
2. ஏற்றியே உலகினில் அற்புதம்
ஞானமாக அருளும் அரங்கா
ஆற்றல் மிக்க உன் பெருமை கூறி
அறிவிப்பேன் பிலவ துலை திங்கள்
3. திங்களிலே மூவாறு திகதி குருவாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள், 04.11.2021 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
இங்கனமே வரதரிஷி யானும்
ஏகாந்த நிலை மக்களடைய உரைப்பேன்
4. உரைக்கவே சாமானியன் தானும்
உயர்ந்து உன்னத நிலைபெற
மறை போற்றும் ஞானிகளின்
மகா ஞான பூசை செய்துவர
5. வருகவே சூட்சும பலம் கூடி
வருங்கால நடப்பை அறியும்
முருகப் பெருமான் ஆசிபெற்ற
முழுமை கண்டஞானிகள் ஆசி கிட்டும்
6. கிட்டவே தொடர் பூசை செய்து
குறிப்பாக முந்தைய வினைகளும்
தட்டாமல் கரைந்து விலக
தரும வழியும் கடைபிடிக்க
7. கடைபிடிக்க கருமம் அகலும்
கண்ணியமான ஞானவழி
தடையின்றி சித்தி ஆகும்
தவசி அரங்கன் வழிக்கு வர
8. வருகவே முடைகள் விலகி
வளமான ஞான பலமான
தரும சிந்தையும் தெளிவும்
தயவானச் செயலும் பெருகி

9. பெருகியே உலகினில் நிலவும்
பெருந்துன்பம் அகற்றும் படியான
தருமவான்கள் ஞானவான்கள்
தயவும் ஆசியும் கிட்டியே

10. கிட்டியே எங்கும் அமைதி
குழப்பம் குறைகள் இல்லா
கட்டமிலா ஞானவான்கள் தலைமை
கட்டமைப்புகள் எங்கும் பரவி

11. பரவியே கலியுகம் தன்னில்
பழுதில்லா நல் மாற்றமாக
துறவிகள் ஞானிகள் ஆட்சி மலரும்
தெரிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–